2019

2019

No. of Printed Pages : 5

301330

**1761**

Register Number

முதலாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம்

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள்** : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் **100 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.

**10x2=20**

1. வெண் மலர் - இச்சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

2. ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம்
யாமே ........ என்னும் பாடலில் அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருள் யாது ?

3. திரு.வி.க எதனைத் தனது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் ? அவர் எழுதிய செய்யுள் நூல்கள் எவையேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

4. இன எழுத்துக்கள் என்றால் என்ன ?

5. தொழிற் பெயரின் வகைகளை எழுதுக மற்றும் முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் எவ்வாறு அமையும் என்பதனையும் குறிப்பிடுக.

6. இடவழுவமைதி - உதாரணத்துடன் விளக்குக.

[ Turn over

7. இடவேற்றுமை - சிறு குறிப்பு தருக.

8. வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகுமிடங்களை உதாரணத்துடன் விளக்குக.

9. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.

10. விரலின் கண்ணுள்ள நகம், பறவைகளது கூட்டம் -
இவ்வேற்றுமைத் தொகைகளை வகைப்படுத்துக.

II. **எவையேனும் 5** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. தாமின்புறுவது, விண்ணதிர்ந்தது - எனும் சொற்களைப் பிரித்தெழுதி புணர்ச்சி விதி கூறுக.

12. ''தென்றல் அசைந்து வரும் தென் தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம் மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும், முல்லையும் நறுமணங்கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப்பாட்டிசைக்கும். இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும் பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவி போற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும். வேனிற்காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச் செடிகொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருவதலால், நலிந்த உடலைத் தேற்றும் நன்மருந்தாகும். சலித்த உள்ளத்தைத் திருத்தும் சஞ்சீவியாகும்''.

-இவ்வுரைப் பகுதியின் மையக்கருத்தையும் வருணனைத் தொடர்களையும் எழுதுக.

13. கீழ்க்காணும் பாடலில் உள்ள செய்யுள் நயங்களை விளக்குக.

"சூரியன் வருவது யாராலே ?
சந்திரன் திரிவது எவராலே ?
காரிருள் வானில் மின்மினி போல்
கண்ணிற் படுவன அவை என்ன ?
பேரிடி மின்னல் எதனாலே ?
பெருமழை பெய்வது எவராலே ?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி
அதை நாம் எண்ணிட வேண்டாமோ!"

**- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.**

14. பாசிலை, சிற்றூர் - இச்சொற்களைப் பிரித்து புணர்ச்சி விதி எழுதுக.

15. கீழுள்ள பத்தியை உரையாடலாக மாற்றுக.

செல்வம் என்பது யாது ? பணம், காசு, நகை, நட்டு, வீடுவாசல், தோட்டந்துரவு, மாடு மக்கள், கல்வி கேள்வி ஆகியன செல்வங்களாக கருதப்படுகின்றன. நடமாட முடியாத அளவுக்கு நோயில் விழுந்து கிடப்பவர்க்கு இவற்றால் என்ன பயன் ? அவருக்கு எந்த உணவும் ஒத்து வராது. பசி எடுக்கிறது. உணவு இருக்கிறது. ஆனால் உண்ண முடியாது. உண்டாலும் ஒத்துக் கொள்ளாது என்றால், அவர் கோடி கோடியாய் சொத்துக் குவித்து என்ன பயன் ? பயன்படாத செல்வம் இருந்தால் என்ன ? போனால் என்ன ? நோயற்ற வாழ்வுதான் செல்வம். அதுவே குறைவற்ற செல்வம் ஆகும்.

16. தொழிலாகு பெயரையும், சினையாகு பெயரையும் எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

17. தமிழ்மொழிச் சான்றோர்களின் கட்டுரை வகைப்பாட்டினை விளக்குக.

18. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதுக.

"தாயது வருகைகேட்ட தனியிளங்குழவி போன்று
நேய மிக்குடையனாகி நெஞ்சினுள் உவமை பூப்பப்
போயழைத் திடுமின் இன்னே போயழைத் திடுமின் இன்னே
போயழைத் திடுமின் இன்னே எனவிரை பொருளிற் சொற்றான்"

[ Turn over

## பகுதி - ஆ

**III. அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் **100 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

19. மொழி மனித குலத்தின் அடையாளம் - எவ்வாறு ?

20. பேச்சுத்தமிழை வகுப்பறையில் பயன்படுத்துவதைத் தவிர்க்கப்பட வேண்டும். ஏன் ?

21. கேட்டல் திறனை வளர்க்கும் வழிகளைக் கூறுக.

22. பேசுதல் திறன் பயிற்சியின் நோக்கங்கள் யாவை ? (எவையேனும் நான்கு மட்டும்)

23. மொழிப்பாடம் கற்பித்தலுக்கு மொழி மரபு அவசியம். ஏன் ?

24. செயல் வழிக்கற்றலில் குழு அட்டைகளும் குழுக்களும் பற்றி நும் பாடப்பகுதியில் உள்ள கருத்தினைத் தெளிவுபடுத்துக.

25. மொழி கற்பித்தலையும், கற்றலையும் மேம்படுத்தும் கருவிகள் எவையேனும் எட்டினைக் கூறுக.

26. அபிதான சிந்தாமணி - குறிப்பு வரைக.

27. கற்பித்தல் பொருள் தயாரிப்பு - விளக்குக.

28. ஆர்வமூட்டும் செயல் என்றால் என்ன ? விளக்குக.

**IV. எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

29. மொழியே மனிதனுக்கு முகமும், முகவரியும் என்பதனை ஆய்க.

30. வட்டாரக் கிளைமொழி அறிவு - ஓர் ஆசிரியர்க்குத் தேவை. ஏன் ?

31. நாநெகிழ் பயிற்சி, நா பிறழ் பயிற்சி - வேறுபடுத்துக.

32. இடைவெளிவிட்டுப் படிக்க வேண்டிய இடங்கள் நான்கினை மட்டும் தகுந்த உதாரணத்துடன் குறிப்பிடுக.

33. பண்பாட்டினை வளர்ப்பதில் மொழிப்பாடத்தின் பங்கு குறித்து நும் பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள புறநானூற்றுப் பாடல் வழி விளக்குக.

34. மொழிப்பாடத்தில் ஒப்படைப்பு வழங்குவதால் உண்டாகும் நன்மைகள் நான்கினை எழுதுக.

35. நிகண்டுகள் என்று எதனைக் குறிப்பிடுகிறோம் ? நிகண்டுகளுள் தலைசிறந்ததாகக் குறிப்பிடப்படுவது எது ? அதனைப் பற்றி ஒரு சிறு விளக்கம் தருக.

36. சிறந்த பாடங்கற்பிப்புத் திட்டத்தின் எவையேனும் எட்டு பயன்களை எழுதுக.

## பகுதி - இ

V. ஒவ்வொரு வினாவிற்கும் **500 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

37. (அ) கேட்டல் திறனை வளர்க்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவைகள் யாவை ?

**அல்லது**

(ஆ) செய்யுள், உரைநடை கற்பிக்கும் நோக்கங்களிலும் முறைகளிலும் உள்ள வேறுபாடுகளை பின்வருமாறு 5 நிலைகளில் - நோக்கம், தொடங்கும் நிலை, வளர்ச்சி நிலை, இலக்கணங்கூறல் மற்றும் பிற வேறுபாடுகள் என தெளிவுபடுத்துக.

38. (அ) நடிப்பு முறையின் மூலம் மொழித்திறன் வளர்த்தலின் நிறை மற்றும் குறைகளை ஆராய்க.

**அல்லது**

(ஆ) மொழிப்பாடம் கற்பித்தலில் கற்பித்தல் பொருட்களின் பயன்பாடு குறித்து விவரிக்கவும்.

- o O o -